

NEW HOME CHURCH ERODE DISTRICT

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Oct 2015

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

***Cell : 94435 58041***
***Phone : 04543 263 278***
***E-Mail arjunanglory@gmail.com***
***www.thewordofchristindia.com***

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | அக்டோபர் 2015 | கனி 11

# அன்னாள்



# HANNAH

**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ்
அவர்களின் வேதபாடம்,
சகோ. ஜான் எஸ் நாதன்
சகோ.ராஜாமணி
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 131

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை செப்டம்பர் மாத இதழில்!

1. மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக்கொண்டிருக்கையில் என்ன விளங்கினது?
2. வெளிப்படுத்தின விசேஷத்தில் எத்தனை சபைகளுக்கு எழுதப்பட்டது? எத்தனை முத்திரை உடைக்கப்பட்டது? எத்தனை தூதர்கள் எக்காளம் ஊதினார்கள்?
3. நான் உன்னைச் சுதந்தரமுறையில் விவாகம்பண்ணுவேன் என்று கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுகிறேன் என்று சொன்னவன் யார்?
4. எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னவன் யார்?
5. மகிமை இஸ்ரவேலை விட்டுபோயிற்று என்று சொல்லி தன் பிள்ளைக்கு இக்கபோத் என்று பேரிட்டவள் யார்?
6. யூதர் கிரேக்கர் யாவரும் எதற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே என்று எவர் எவர்களுக்கு எழுதுகிறார்?
7. சவுல் செத்துப்போனான் என்று தாவீதுக்கு அறிவித்து தனக்கு வெகுமானம் கிடைக்கும் என்று நினைத்தபோது அவனுக்கு என்ன கிடைத்தது?
8. இப்பிரபஞ்சத்துப்பிரபுக்களில் ஒருவனாகிலும் இயேசுவை அறிந்து கொண்டார்களா? அப்படி அறிந்தார்களானால் கர்த்தரை என்னசெய்ய மாட்டார்களே?
9. காலை முதல் மதியானம் வரை பலிபீடத்திற்கு எதிரே குதித்து ஆடிய கூட்டத்தார் யார்?
10. நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்றும் பயந்திருக்கிறேன் என்று ஏன் பவுல் ஏழுதினார்?

- அன்னாள் என்றால் கிருபை அல்லது சிறப்பு என்று அர்த்தம்
- எல்கானாவின் மனைவி
- சாமுவேலின் தாய்
- ஏலியின் நாட்களில் வாழ்ந்தவள்
- சாமுவேலுக்குப்பின் மூன்று மகன்களையும் இரண்டு பெண்பிள்ளைகளையும் பெற்றாள் - 1சாமு.2:21
- இக்கட்டிலும் தேவனை துதித்துப்பாடினாள் - 1சாமு.2:1-10
- பழைய ஏற்பாட்டில் ஒரு முன்மாதிரியாக வாழ்ந்தவள்




HANNAH

சிறுவர் பகுதி

## பவுலுக்கும் பர்னபாவுக்கும் பலியிட வந்த ஜனங்கள்

*வேதபகுதி: அப்போஸ்தலர் 14:8-18*



லீஸ்திரா பட்டணத்தில் ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல் சப்பாணியாயிருந்து ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாய் உட்கார்ந்து பவுல் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அவனை பவுல் உற்றுப் பார்த்து, இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்த சத்தத்தோடே சொன்னான். உடனே என்ன நடந்தது தெரியுமா? அவன் குதித்தெழுந்து நடந்தான். இதைப் பார்த்த ஜனங்கள் தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் வந்திருக்கிறாங்க என்று அந்த நாட்டு லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட ஆரம்பித்து பவுலை மெர்க்கூரி என்றும் பர்னபாவை யூப்பித்தர் என்றும் சொன்னாங்க. இத்தோடு விட்டுவிட்டாங்களா? விடவில்லை.

அந்த பட்டணத்துக்கு முன்னே இருந்த யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடே கூட அவர்களுக்கும் பலியிட மனதாயிருந்தான். இதைக் கேட்ட பொழுது பர்னபாவும். பவுலும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு கூட்டத்துக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய் மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப்போலப்பாடுள்ள மனுஷர்தானே; நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டு மென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றாங்க.

இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்கு ஜனங்கள் பலியிடாதபடிக்கு அவர்களை அமர்த்துகிறது அரிதாயிருந்தது. பவுலும் பர்னபாவும் அறிவித்த தேவனிடத்திற்கு அவர்கள் மனந்திரும்பாமல், பவுலையும் பர்னபாவையுமே தேவர்கள் என்று கருதி அவர்களுக்கு பலியிட முயற்சித்தாங்க நாமும் இப்படி தேவனால் அனுப்பப்பட்டவர்களுக்கு துதியையும் மகிமையையும் செலுத்திவிடக் கூடாது. ஆனால் பாருங்க **பேதுரு சபை, பவுல் சபை, யோவான் சபை** என்றெல்லாம் வைத்துக்கொண்டு இருக்கிறாங்க. கொஞ்சம்குறைய தேவனை அறியாத இந்த லீஸ்திரா பட்டணத்தார்களைப் போல இவர்களும் அப்போஸ்தலர்களுக்கு சபைகளைக் கட்டுகிறாங்க. ஆனால் இதை பவுலோ பர்னபாவோ அன்றே ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனிடத்திற்கு மனந்திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் நம்முடைய உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை தேவன் ஒருவருக்கே செலுத்தக்கடவோம்.

மனப்பாட வசனம்: “வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும். அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து. அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்” (கொலோசெயர் 3:17)



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 15 அக்டோபர்-2015 கனி - 11

ஆசிரியருரை

## உள்ளான மனுஷனும் புறம்பான மனுஷனும்

Inward Man & Outward Man




உள்ளான மனுஷன் புறம்பான மனுஷன் என இரண்டு விதமான மனுஷர்களை நாம் பார்க்கிறோம். இதைக்குறித்து பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதும்போது; "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" என்கிறார் (2கொரி.4:16). முதலாவது எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் என குறிப்பிடுவதை கவனியுங்கள். புறம்பான மனுஷன் என்று சொல்லும்போது பழைய சுபாவங்கள் அழிக்கப்படுகிறது. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற 2கொரிந்தியர் 5:17-ன்படி அவன் கர்த்தருக்குள் இருக்கும்போது பழையவைகள் ஒழிந்துபோகிறது. அவனோ ஒரு புதிய சிருஷ்டியாயிருக்கிறான். மனிதன் அதே மனிதன்தான் ஆனால் அவனுடைய பழைய பழக்கவழக்கங்கள் முற்றிலும் கர்த்தருடைய வசனத்தினால் அழிக்கப் படுகிறது. ஆகையால் அவனுடைய செயல்பாடுகள் முற்றிலும் புதிய சிருஷ்டிக்குரிய வையாக மாறுகிறது. முன்னே துன்மார்க்கமாய் வாழ்ந்த அவன், கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் கர்த்தருக்கு ஏற்றவைகளை சிந்தித்து செயல்பட துவங்குகிறான். தேவனுக்கு ஏற்றவனாக கர்த்தருடைய வசனம் அவனை மாற்றுகிறது.

ஆகையால் பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு,பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்பதை நினைப்பூட்டுகிறார் (ரோ.6:6). கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒருவன் பாவத்திற்கு ஊழியஞ்செய்வதில்லை, ஏனெனில் அவன் பாவத்துக்கு செத்து நீதிக்கு அவரோடேகூட பிழைத்தவனாயிருக்கிறான். எப்படியென்றால் ஞானஸ்நானத்திலே இது நடைபெறுகிறது. இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் பாவத்துக்கு செத்து நீதிக்கு அவரோடேகூட பிழைத்தவராயிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இன்றே அவரோடே கூட மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்வுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டு அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப் படுங்கள். அப்பொழுது அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் படுவீர்கள்.

பழையவைகள் முற்றிலும் அழிக்கப்படவேண்டியவை. அவைகள் எதுவென்றால்; "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ.3:5). பாவத்தை பிறப்பிக்கும் இடமே, நம்முடைய அவயவங்கள் தான். இவைகள் மூலமாக பிசாசு இச்சைகளை தூண்டுகிறான். ஆகையால் மாம்சத்தில் எழும்பும் விபசாரம், அசுத்தம் அதாவது அசுத்தமான நினைவுகள் நம்மை கறைபடுத்திவிடும். எனவே இருதயத்தில் இச்சித்தாலே விபசாரம் செய்தாயிற்று என்று கர்த்தர் சொல்லுகிறார். எனவே இச்சை பாவத்தை பிறப்பிக்கும். ஆகையால் சகல அசுத்தத்தையும் நம்மைவிட்டு களையவேண்டும். மேலும், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை. விக்கிரகஆராதனை செய்தால் தான் விக்கிரக ஆராதனை என்பதல்ல. பொருளாசையே விக்கிரக ஆராதனைக்கு சமமாக இருக்கிறது. அதிகமான பொருட்களை அநேகர் வாங்கி குவித்துவைப்பார்கள். இது நாளடைவில் பொருளாசைக்கு ஒரு மனிதனை இழுத்துசென்று விடும். இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடவேண்டும். அதை அழிப்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. கர்த்தருடைய வசனத்தை வைத்து அவைகளை அழிக்க முற்படவேண்டும். ஒரு பூச்சி பிடித்த செடியை, அந்த பூச்சிகள் எப்படி முற்றிலும் அழித்துப்போடுகிறதோ, அதைப்போல விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை போன்ற பாவங்கள், ஒரு மனிதனை ஆட்கொள்ளும்போது நாளடைவில் அவனை முற்றிலும் அவைகள் அழித்துப்போடும். அவைகள் அவனை அழித்துப்போடும் முன் அவன் அவைகளை கர்த்தருடைய வசனத்தினாலே அழித்துப்போடவேண்டும். "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" என வேதம் நமக்கு தெளிவாக போதிக்கிறது (கொலோ.2:20-23).

சிலர் மாம்சமானதை தன் புயபலமாக்கிக்கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிறார்கள். மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. ஒருவன் மாம்சத்தில் மேன்மை பாராட்டுவதற்கு என்னஇருக்கிறது. இவையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்துபோகும் என காண்கிறோம். மனுஷனுடைய போதனைகள் மாம்சபிரகாரமாக இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய போதனைகள் ஆவிக்குரியதாகவும், அவைகள் ஒரு மனுஷனை உயிர்ப்பிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவுடனே ஞானஸ்நானத்திலே உலக வழிபாடுகளுக்கு நாம் மரித்திருந்தோமானால் உலக வழக்கத்தின்படி இல்லாமல் ஆவிக்குரியவர்களாக கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாக இருப்போம். "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோம.8:13). நீங்கள் ஒவ்வொரு நாளும் புறம்பான காரியங்களை அழித்து கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக



4. நாம் ஒரு பந்தயத்தில் ஓடுகிறோம் சகிக்கும் சக்தி தேவைப்படும் ஓட்டம்.

**அ) இயேசுவை நோக்கிப்பார்:**

1. நம் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவரே. கிறிஸ்துவே தலைவரும் நம்முடைய விசுவாசத்தை பரிபூரணப்படுத்துகிறவரும் அவரே.

2. நாம் ஒருபோதும் அடையாத அதிகமான துன்பங்களை அவர் சகித்திருக்கிறார். அவர் வேதனையை சகித்து சிலுவையின் வந்த அவமானத்தை எண்ணாதிருந்தார்.

3. இயேசுவானவரால் எப்படி அதைச் செய்ய முடிந்தது? தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தை அவர் நோக்கிப் பார்த்தார். அவர் நேசிக்கிறவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவரும் சந்தோஷத்தை சிலுவையில் மூலம் அவர் நோக்கிப்பார்த்தார்.

4. பாவ மன்னிப்பை அருளுகின்ற அவர் பணி இப்போது முடிந்துவிட்டது. நிரந்தரமாக அவர் இப்போது பிதாவின் வலதுபாரிசத்தில் கனமும் மகிமையும் அதிகாரமுமுள்ள இடத்தில் அமர்ந்திருக்கிறார்.

5. இந்த புத்தகத்தின் வாசகர்கள் பின்வாங்கவும் சோதிக்கப்பட்டு பின்நோக்கிப்போகவும் விரும்புகிறார்கள்.

6. அவர்களை முன்நோக்கிச் செல்லும்படி உற்சாகப்படுத்துகிறார். விசுவாச வீரர்கள் யாவருமே எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கின்றனர். அவர் மிக மோசமான துன்பங்களை அழகாக எதிர்கொண்டிருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் பலர் தங்கள் விசுவாசத்துக்காக மரித்திருக்கிறார்கள். இந்த வாசகர்கள் இன்னும் இந்த (அளவுக்கு) அதிகமான துன்பத்தை அனுபவிக்கவில்லை. நாமும் கூட அனுபவிக்கவில்லை. ஆனாலும் பலர் தங்கள் (விசுவாச வாழ்க்கையை) ஓட்டத்தை விட்டு விட்டார்கள்.

7. மத்தேயு14 ம் அதிகாரத்தில் பேதுருவைப்போல் இயேசுவை விட்டு நாம் நம் கண்களை திருப்பும்போது நாம் மூழ்கத் (பாவத்தில்) துவங்குகிறோம்.

**11. தேவ அன்பின் நிச்சயம்.**

தேவன் நம்மை நேசிப்பதை வேதவாக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

1. சிட்சை என்கிற கிரேக்க வார்த்தைக்கு குழந்தைகளைப் பயிற்றுவிப்பது, புத்தி சொல்லுதல், மற்றும் சீர்ப்படுத்துதல் என்று பொருள்.

2. 5,6 வசனங்கள் நீதிமொழிகள் 3:11,12 ன் மேற்கொள்.

3. நாம் துன்பப்படும்போது தேவன் இனி நம்மை நேசிக்கவில்லை என்று நினைக்கிறோம். தேவன் நம்மை அதிக செல்லத்தினால் கெட்டுபோன குழந்தையாக அல்ல பக்குவப்பட்ட குழந்தையாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

3. அதற்கு சற்று சிட்சித்தல் தேவைப்படுகிறது. நேசிக்கும் (மக்கள்) இதயங்கள் தேவ சிட்சையை சகித்துக்கொள்வர்.

நம்முடைய தனிப்பட்ட அனுபவம் தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

1. நம் அனைவருக்கும் தந்தை உண்டு. அவர்கள் ஒரு நல்ல தகப்பனாயிருந்தால் நம்மை ஒழுக்கமாக வளர்க்க வேண்டும். இந்த ஒழுக்கத்தை கற்றுக் கொள்வதில் அதிகாரத்தை மதிக்க நாம் கற்றுக்கொள்கிறோம்.

# பாடம் -15 விசுவாசத்தின் சகித்துக்கொள்ளும் சக்தி - *Jerry Bates*

Endurance of Faith (Hebrews12) **-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**




1.எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை பெற்றுக்கொண்டவர்கள் மிகவும் களைத்து தங்கள் விசுவாசத்தையே விட்டுவிட மனதாயிருந்தார்கள்.

2. இந்த நிருபத்தின் மையக்கருத்து விசுவாசத்தில் வாழ இதன் எழுத்தாளர் மூன்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றார்.

**1. மற்றவர்களைப் பற்றிய மாதிரி (12:1-4).**

முன்னிருந்த வெற்றிபெற்ற மேகம் போன்ற திரளான சாட்சி களைப் பாருங்கள்.

1. மேகம் போன்ற என்று குறிப்பிடுகின்ற அளவுக்கு அங்கே திரளான சாட்சிகள் இருந்தார்கள்.

2. நம்மெல்லாருக்கும் நம் வாழ்க்கையில் நாம் பின்பற்றும் மாதிரிகள் காதநாயர்கள் உண்டு. நாம் தெரிந்துகொண்டவைகள் செய்யும்படி உற்சாகப்படுத்தி நம்மிலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் அவர்கள்.

3. சிலர் நல்லவர்களல்ல ஆனால் மற்றவர்கள் நல்லவர்கள்.

4. எபிரெயர் 11 ம் அதிகாரத்தில் இவர்களே விசுவாச வீரர்கள் அவர்கள் நமக்கு உற்சாகமளிப்பதில் மிகப்பெரிய ஆதாரங்களாயிருக்க முடியும்.

குடும்பத்தில் உங்களுக்கு பிரச்சனைகள் உண்டா யோசேப்பை நோக்கிப்பாருங்கள்.

உங்கள் வேலை உங்களுக்கு மிகப் பெரியதாய் தோன்றுகிறது என்று எண்ணுகிறீர்களா? மோசேயை நோக்கிப்பாருங்கள்.

திருப்பித் தாக்கும்படி சோதிக்கபடுகிறீர்களா? தாவீது தன் பிரச்சனைகளை எப்படி கையாண்டார் என்று நோக்கிப்பாருங்கள்.

**உங்களையே நீங்கள் நோக்கிப்பாருங்கள்,**

1. போட்டிக்குத் தயாராகும்படி விளையாட்டு வீரர்கள் பளு தூக்கி பயிற்சி எடுக்கிறார்கள். மட்டையால் பந்தை அடித்து விளையாடும் விளையாட்டு வீரர்கள் அந்த மட்டையின் விளிம்பில் கனமான பகுதியுடன் அடிக்கடி சுழற்றிக் கொண்டிருப்பர். ஆனால் யாரும் கனமாக பொருட்களோடு (அணிந்து கொண்டு) போட்டியிடுவதில்லை ஏனென்றால் அது அவர்களின் செயல் வேகத்தைக் குறைக்கும்.

2. நமக்கு இடையூறாயிருக்கிற பாரங்களை நாம் தூரத்தில் வைத்துவிட வேண்டும். இவைகள் மற்றவர்களின் பார்வைக்கு நன்றாகத் தோன்றும் ஆனால் நாம் தேவனுக்கு சேவை செய்து முன்னேறுவதில் அவைகள் நமக்கு இடையூராக இருக்கும். இந்த உலகத்தின் வசதிகளைப் பெருக்க சிலர் 2-3 வேலைகள் செய்வீர். ஆனால் அது தேவ சேவைக்கு சற்றும் நேரம் ஒதுக்க விடாது.

3. நம்மை எளிதாக சிக்கவைக்கிற பாவங்களை விட்டுவிட வேண்டும். கற்பனையாக நீளமாக தொங்குகிற ஒரு நீண்ட கயிறு ஓடும் ஒருவனை எளிதாக விழத்தள்ளிவிடும். இவர் பாவத்தை குறிப்பிடவில்லை. ஆனால் அது உன்னை எளிதாக சோதனைக்குள்ளாக்குகிற அந்த பாவமாகயிருக்கலாம்.



இருக்கப்பிரயாசப்படுங்கள். அப்பொழுது பிதாவாகிய தேவன் உங்களை அதிகமாக நேசிப்பார். உங்களைக்கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். உலகத்தோடு ஒத்துவாழ்வோம் என்று தீர்மானித்து மாம்சத்தின்படி பிழைப்பீர்களானால் சாவீர்கள். கர்த்தருடைய ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிக்கும்போது அவரோடு பிழைப்பீர்கள். வாழ்வதும் வீழ்வதும் உங்கள் கைகளில் இருக்கிறது. சவுல் கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையில் நேர்த்தியானதை தேர்வு செய்தபடியால், கர்த்தருடைய ஆவியானவர் அவனை விட்டுவிலகினார். அவனோ மரித்தான். நீங்கள் இன்றே ஒரு நல்ல தீர்மானத்தை எடுத்து புறம்பான காரியங்களை அழித்துப்போடுங்கள்.

**இரண்டாவது உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படவேண்டும்.** நாம் புதிதானவர்களாக இருக்கும்போது நம்முடைய வேலைகளும் புதியவைகளாகவே இருக்கும். வளர்ச்சியடையக்கூடிய ஒரு செடியானது எப்படி நாளுக்கு நாள் வளர்ச்சியடைகிறதோ, அதைப்போல புதிதாக்கப் பட்டவர்கள் நாளுக்குநாள் வளர்ச்சியடைய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். நம்மிடத்திலே பழைய சுபாவங்கள் இல்லை என்பதை எப்படி நாம் மற்றவர்களுக்கு காண்பிக்கமுடியும். நம்முடைய நற்கிரியைகளின் மூலமாகவும், நம்முடைய மாதிரியான வளர்ச்சியின் மூலமாகவும் காண்பிக்கமுடியும். பவுல் சொல்லுகிறார்; "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்" என்றார் (கலா.6:17). இயேசுவினுடைய சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிவதோடு அநேகர் நின்று விடுகின்றனர். ஆனால் பவுல் இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன் என்கிறார். அப்படியானால் அவரைப் பார்க்கும்போதெல்லாம் இயேசுவை ஜனங்கள் பார்த்தார்கள். அவருடைய சுபாவம் முற்றிலும் அழிக்கப்பட்டு இயேசுவின் குணாதிசயங்கள் பவுல் மூலமாக வெளிப்பட்டன. இன்றைக்கு இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் எழும்புவார்களேயானால் உலகம் ஒரே நாளிலே கிறிஸ்தவமாக மாறிவிடும். ஒவ்வொருவரும் நாளுக்கு நாள் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தன் சரீரத்திலே தரித்துக்கொண்டு தேவனை அறியாதவர்கள் மத்தியில் கிறிஸ்துவையும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் பேச்சிலும், நடத்தையிலும், செய்கையிலும், வெளிப்படுத்தவேண்டும். இப்படி செய்யும்போது கிறிஸ்துவினுடைய நாமம் மகிமைப்படும்.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோம.6:13). முன்னே பாவத்துக்கு அடிமைகளாக இருந்த காலத்தில் நம்முடைய அவயவங்களை பாவத்துக்கு ஒப்புக்கொடுத்திருந்தோம். இப்பொழுதோ பாவத்திலிருந்து மீட்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானோம். ஆகையால் உங்கள் அவயவங்களை பாவத்திற்கு இனி ஒப்புக்கொடாமல் நீதிக்குரிய ஆயுதங்களாக அவைகளை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். முன்னே பாவம் செய்கிற ஜனங்களோடு ஒத்துப்போன நீங்கள் இப்பொழுது பாவத்திற்கு விலகினவர்களாகவும், அவர்களை நீதியின் பக்கம் திருப்புகிறவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களோடு ஒருநாளும் ஒத்துப்போய்விடாதிருங்கள். உங்களுடைய பரிசுத்தம் அவர்களை

பற்றிப்பிடிக்கவேண்டும். "அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.3:12,13). ஆம், நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற திராட்சைக் கொடிகளாயிருப்போமானால் அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கிறவர்களாயிருப்போம். அதனதன் கனி அதனதன் கொடியினாலும், கனியினாலும் அறியப்படும். நாம் கர்த்தருடையவர்களானால் கர்த்தருக்கேற்ற காரியங்களைச் செய்து, அவருக்குப்பிரியமான கனிகளைக் கொடுக்கப் பிரயாசப்படுவோம்.

ஒரு ஸ்திரீயானவளைப் பற்றி பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" என எழுதுகிறார் (1தீமோ.2:9,10). பொதுவாக ஸ்திரீகள் தங்களை பலவிதமான நகைகளினாலும், இன்றைய நவீன காலத்தில் பியூட்டி பார்லர் என்று சொல்லக்கூடிய இடங்களுக்கும் சென்று தங்களை அலங்கரித்துக்கொள்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் போதிப்பதென்ன? ஸ்திரீகள் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது முத்துக்களினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடி நற்கிரியைகளினாலும் அலங்கரிக்கவேண்டும் என காண்கிறோம். இப்படியே பூர்வ காலத்து ஸ்திரீகள் தங்களை அலங்கரித்தார்கள். ஆகையால் பவுல் மேலும், பொதுவாக எல்லோருக்கும் சொல்லும்போது; "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என குறிப்பிடுகிறார். நாம் ஒவ்வொரு நாளும் புதிதானவர்களாகவும் அதாவது புறம்பான மனுஷன் நாளுக்கு நாள் அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படவும் வேண்டும். அப்படி மாற பிரயாசம் எடுங்கள்.

**புறம்பாக யூதனானவன் யூதனா?**

"புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல, உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" (ரோம.2:28,29). இயேசுவின் நாட்களில் அநேக யூதர்கள் நாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று தங்களை குறித்து புகழ்ந்துகொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே என்றார். ஆகையால்



இயேசுவை ராஜாவாக கருதினான்) நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்களுக்கு மனதுண்டா என்றார் 19:4 பிலாத்து மறுபடியும் நான் இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன். ஆகையால் இவரை வெளியே கொண்டுவருகிறேன் என்றார் வசனம் 6... 12 பிலாத்து இயேசுவை நியாயம் விசாரிக்க தொடங்கியதிலிருந்து கடைசிவரைக்கும் பலமுறையில் அவரை குற்றமற்றவராகவே தீர்மானித்திருந்தான்.

**குறிப்பு:** வகைதேடியவர்களை குறித்து நாம் வாசித்து தெளிவுபெற்றோம். நீங்களும் அதனை தெரிந்து தெளிவு பெற்று இருக்கிறீர்கள். மேலே குறிப்பிட்ட வகை தேடியவர்களில் உங்களை கவர்ந்தவர்கள் யார் என்பதை தக்க எடுத்துக்காட்டுடன் எங்களுக்கு எழுதினால் முதல் மூன்று பேர்களுக்கு தக்கசன்மானம் காத்திருக்கிறது. உடனே தாமதமின்றி எழுதி உங்களின் மேலான கருத்துக்களை தெரிவியுங்கள் கர்த்தர் உங்களை மிகவும் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக! 1கொரிந்தியர்10:31 நீங்கள் நிச்சம் வெற்றி பெறுங்கள். வாழ்த்துக்கள் பல. **(முகவரி: சகோ. ஜான் எஸ். நாதன், சுவிசேஷ ஊழியர், கிறிஸ்துவின் சபை, கிறிஸ்டியன் சிட்டி, மீஞ்சூர் -601 203 மொபைல்: 94444 43378).**

தெரிந்து கொள்வோம்

## இரண்டும் ஒன்றே!

- K.R.K.Ravi Asir
Associate Editor

▶ விக்டோரியா ஏரியையும், வெள்ளை நைல்நதி தோன்றுமிடத்தையும் கண்டுபிடித்தவரும, கண்டுபிடித்த ஆண்டும் ஒன்றே. இங்கிலாந்தை சேர்ந்த ஸ்பெக் ஆண்டு 1858.

▶ மிகப் பெரிய வைரமான கல்லினைன் வைரமும், சிட்னி நகரமும் ஒரே நாளில் கண்டறியப்பட்டன. ஜனவரி 26.

▶ மனித உடலிலுள்ள மொத்த ஜோடி விலா எலும்புகளின் எண்ணிக்கையும் தேளின் உடலிலுள்ள வளையங்களின் எண்ணிக்கையும் ஒன்றே -12.

▶ ஸ்பெர்ம் திமிங்கிலம் எழுப்பும் ஒலி கேட்கும் தொலையும், தேனீக்கள் இடைவிடாமல் பறக்கும் தூரமும் ஒன்று -11கி.மீ.

JOIN OUR
WORLD EVANGELISM BIBLE SCHOOL
RIGHT NOW
Contact: 94435 58041

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**
**இயேசு சொல்கிறார்:**
**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்"**
**யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

'ஒரே வழி' வேதபாடம்
**The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று
**Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்
வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College**
**Post Box No. 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**

# வேதாகமத்தை ஆராய்வோம் தெளிவு பெறுவோம்

-John S. Nathan 94444 43378

**-சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

சீரியாவின் பிரதி நிதியான வெட்டிலியஸ் (Vitllius) ஆணையின் பேரில் ஹனு 36ல் பதவியை இழந்தான். பின் நாளில் அரசர் கையுயஸ் கலிகுலா (Gaius Caligula) இவரை தற்கொலை செய்து கொள்ள கூறினான் என்றும், இவர் கிறிஸ்தவர்களை ஆதரித்து உதவியதால் கொலை செய்வதை கலையாக கருதி வந்த கொலை பாதகன், தன் சொந்த தாயை, மனைவியை தன் சுற்றத்தாரை கொலை செய்தவன் பிலாத்துவின் தலையை துண்டித்து கொலை செய்தான் என்கிறது வரலாறு.

இதனால் கிறிஸ்துவுக்கு இரத்த சாட்சியாய் மரித்து தன்னையே மேன்மை படுத்திக் கொண்டார். மேலும் பிலாத்துவின் மனைவியையும் எத்தியோப்பிய திருச்சபையினர் அவர்களை நினைகூர்ந்து வருவதுடன் ஆண்டுதோறும் பெரும் விழா எடுத்து வருகிறார்கள். ஐதீகமான கிரேக்க சபையினர் பிலாத்துவையும் அவரின் மனைவியையும் புனிதமானவர்களென்றும் கிறிஸ்துவின் இரத்த சாட்சிகளென காப்டிக் (Coptic) சபையினர் அவர்களை மேன்மை படுத்திவருகிறார்கள்.

**வேதாகமம் என்ன கூறுகிறது?**

மத்.27:1,2 சகல பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணி, அவரைக்கட்டி கொண்டுபோய் தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள் வசனம் 17 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து வசனம் 19 பிலாத்து நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் அவர்நிமித்தம் இன்றைக்கு சொப்பனத்தில் வெகுபாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள் வசனம் 24 இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன்

லூக்.23:4 இயேசுவினிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை வசனம் 8 பிலாத்து இயேசுவை காணும்படி வெகுநாளாய் ஆசைகொண்டிருந்தான். அந்தப்படி அவரைக்கண்டபோது மிகவும் சந்தோஷப்பட்டான். வசனம் 10 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவர்மேல் பிடிவாதமாய்க் குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள். வசனம் 14 பிலாத்து இயேசுவை கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது இயேசுவின்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவரிடத்தில காணவில்லை. வசனம் 15 ஏரோதும் இயேசுவினிடத்தில் குற்றம் காணவில்லை. மரணத்துக்கேதுவாக இவர் ஒன்றும் செய்யவில்லையே வசனம் 16 ஆனபடியால் இவரைத் தண்டித்து விடுதலையாக்குவேன். வசனம் 20 பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய் மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான். வசனம் 22 பிலாத்து மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன் இவர் என்ன பொல்லாப்புச்செய்தார்? மரணத்திற்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவரிடத்தில் நான் காணவில்லை ஆகையால் நான் இவரைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்.

யோவான் கூறினார்: யோவான்18:38 ...மறுபடியும் பிலாத்து யூதர்களிடத்தில் வெளியே வந்து நான் அவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்... ஆகையால் யூதருடைய ராஜாவை (பிலாத்து ஒருவர்தான் இயேசுவை கனப்படுத்தி, மதிப்பளிக்கும் வகையில்



புறம்பாக யூதனானவன் யூதனல்ல, அதைப்போல புறம்பாக மாம்சத்திலே செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல, பவுல் சொல்லியபடி உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், அதாவது எழுத்துகொள்ளும் ஆவியோ உயிர்ப்பிக்கிறது, ஆகையால் எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் விருத்தசேதனமே விருத்தசேதனம். இது மனுஷரால் அல்ல தேவனாலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் புறம்பான காரியங்களை அழித்துப்போட்டு உள்ளான மனுஷனில் நாளுக்கு நாள் புதிதாகுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**அகத்தியில் ஆக்ஸிஜன்** உடலில் உள்ள நச்சுப் பொருட்களை நீக்கும் தன்மை அகத்திக் கீரைக்கு உண்டு. வெற்றிலைக் கொடி படர அகத்தி மரங்களை தான் நடுவர். மரங்கள் நடுவதில் அரச மரங்கள் குறித்த பரிந்துரை செய்த விஞ்ஞானிகள் தற்போது அகத்தி மரங்களையும் பரிந்துரை செய்கின்றனர். அகத்தி மரங்கள் அதிக அளவில் கார்பன் டை ஆக்ஸைடை உட்கவர்ந்து ஆக்ஸிஜனை வெளியிடும் இயல்பைப் பெற்றுள்ளன.


**ஜெபியுங்கள்**

- குமுளியில் நடைபெற்ற கூட்டம் தேவனுடைய கிருபையால் ஆசீர்வாதமாய் நடைபெற்றதற்காக...
- மாவட்டங்கள் தோறும் கர்த்தருடைய சபைகள் எழும்ப...
- வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- புதிய ஊழியங்களுக்காக...
- கேரள பகுதி ஊழியங்களுக்காக...
- தொலைக்காட்சி ஊழியங்களுக்காக...
- வானொலி ஊழியங்களுக்காக...
- மாத இதழின் ஊழியங்களுக்காக...
- நம் இந்திய தேசம் கர்த்தரை அறிகிற அறிவில் வளர...
- ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் ஊழியம் செய்ய எழும்ப...



## பொது அறிவு சோதனை

1. மக்களவை தேர்தலில் போட்டியிட குறைந்த பட்ச வயது என்ன?
அ)18வயது ஆ)35வயது இ)25வயது
2. பூமியைப்போல ஒரு நாளைக்கு 24மணி நேரம் கொண்ட கோள் எது?
அ)நெப்டியூன் ஆ)செவ்வாய் இ)புளுட்டோ
3. உலகின் முதல் விண்வெளி நிலையத்தின் பெயர் என்ன
அ)சல்யூட்-1 ஆ)மிர் இ)ஸ்கைலாப்
4. இந்தியாவின் மிக பெரிய நதி எது?
அ)காவேரி ஆ)யமுனை இ)கங்கை
5. சர்வதேச குடும்ப தினம் என்று கொண்டாடப்படுகிறது?
அ)செப்டம்பர் ஆ)மே,15 இ)மார்ச்,26



**விடைகள்**

**1. 25 வயது 2. செவ்வாய் 3. சல்யூட் 1 4. கங்கை 5. மே,15**

# முன்பின் அறியாத பாஷைகளில் பேசுதல்

## Speaking In New Tongues

J.C.Choate




இன்று அந்நிய ‘‘பாஷைகளில்’’ பேசுவதைப் பற்றி அநேக ஜனங்கள் சம்பாஷிக்கின்றதை நாம் கேள்விப்படுகிறோம். அதன் ஓசைகள் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கின்றன, மேலும் அவற்றைப் பற்றிய விவரமும் காரணமும் கேட்கும் போது, அவர்கள் தாங்கள் ‘‘பரலோக’’ பாஷை பேசுகின்றதாகவும், அந்த பாஷை தேவனால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியது எனவும் பதிலளிக்கின்றனர். உண்மையாகவே வேதம் கற்பிக்கிறது என்ன என்பதை அறிவோமானால், இவைகள் எல்லாமே வேத வாக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு மாறாக உள்ளது என்பதை நாம் அறிவோம்.

அப்போஸ்தலர்கள் - மேலும் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் வாக்களிக்கப்பட்டிருந்தது யேவான்14:26; லூக்கா24:49; மற்றும் அப்போஸ்தலர்1:8 வசனங்களை வாசியுங்கள். கர்த்தர் வாக்களித்திருந்தபடி பெந்தெகொஸ்தே நாளிலே, எருசலேம் நகரில் அவர்கள் அந்த வல்லமையைப் பெற்றார்கள். ஆவியானவர் அங்கு கூடியிருந்த எல்லார் மேலும் ‘ஊற்றப்பட’ வில்லை, ஆனால் அப்போஸ்தலர்கள் மேல் மட்டுமே ஊற்றப்பட்டார். கர்த்தர் இனி ஒருபோதும் அவர்களோடு மாம்சத்தில் இருக்கப்போவதில்லை என்பதினால் அவர்கள் இந்த பெலத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

அந்த சமயம் புதிய ஏற்பாடு அவர்களுடைய பிரசங்கத்திற்கு உதவியாக எழுத்துவடிவில் இல்லை, மேலும் அப்போஸ்தலர்கள் சத்தியத்தைப் போதித்துக் கொண்டிருந்ததால், அதை அறிந்து கொள்ளுவதற்கு மக்களால் புதியஏற்பாட்டை நோக்கி செல்ல முடியவில்லை. இந்த இடைக்கால நாட்களில், அப்போஸ்தலர்கள் அங்குள்ள மக்களின் பாஷைகளில் பேச வல்லமையுள்ளவர்களாகும்படிக்கும், கர்த்தருடைய வேலையில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல பலவிதமான அற்புதங்களைச் செய்வதற்கும் பரிசுத்த ஆவியின் வல்லமை அப்போஸ்தலர் களுக்குக் கொடுக்கப்பட்டது. அப்போஸ்தலர் 2-ல் காணப்படுவதுபோல, அப்போஸ்தலர்கள் அங்கிருந்த ஜனங்களின் பாஷைகளைப் பேச வல்லமையுடையவர்களாகவும், புரிந்து கொள்ளக் கூடியவர்களாகவுமிருந்தார்கள். இன்று ‘அந்நிய பாஷைகளில்’ தங்களால் பேச முடியும் என உரிமை பாராட்டுகிறவர்கள், உண்மையாகவே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றிராதபடியினால் அவர்கள் பேசுகின்ற பாஷைகள் சபையாரால் சிறிய காரணங்களுக்குக்கூட புரிந்து கொள்ளக் கூடாததாயிருக்கிறது. உண்மையில், அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அவர்கள் தங்கள் அருகில் நின்று தங்களுடைய செய்திகளை சபையாருக்கு மொழிபெயர்க்கும்படிக்கு அங்குள்ள ஜனங்களை கூலிக்கு அமர்த்துவார்கள். இப்படிப்பட்ட காரியம் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டிருந்தது என எங்கேயாவது நாம் வாசிக்கிறோமா? இல்லை! மாறாக, அந்த அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஊழியஞ்செய்து கொண்டிருந்தார்களென நிருபிக்கும் வண்ணமாக அவர்கள் அங்கிருந்த ஜனங்களின் பாஷைகளில் சரளமாகப் பேச வல்லமையுடையவராயிருந்தார்கள்.



# வேதத்தின்படி ஜனங்களுக்கு போதித்த ஸ்தேவான்



இன்றைக்கு உலகமெங்கும் போதகர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் அநேகர் ஸ்தேவானைப்போல வேதத்தின்படி சரியாக போதிக்கிறார்களா? என்றால் இல்லை. ஸ்தேவானுடைய போதனையை சற்று உன்னிப்பாக கவனிக்கும்படி உங்களை நான் அப்போஸ்தலநடபடிகள் புத்தகம் 7 ம் அதிகாரத்திற்கு அழைத்துச் செல்கிறேன். உங்களுடைய வேதாகமத்தை வைத்து விரிவாகபடித்துக்கொள்ளுங்கள்

"சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார் அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். ....மேலும் விருத்தசேதன உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம் நாளிலே அவனை விருத்தசேதனம்பண்ணினான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்றான். அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டு போகும்படியாக விற்றுப்போட்டார்கள். .... பின்பு யோசேப்பு தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய எழுபத்தைந்து பேரை அழைக்க அனுப்பினான். ... ஆபிரகாமுக்குத் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத்தத்தம் நிறைவேறுங் காலம் சமீபித்தபோது, யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள். ... அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான். ... இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத்தரிசனமான தூதனாலே, தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார். இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக்கொண்டுவந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். ... சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. ... மேலும் நீ பார்த்த மாதிரியின்படியே சாட்சியின் கூடாரத்தை உண்டுபண்ணுவாயாக என்று மோசேயுடனே பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது. ... தேவதூதரைக் கொண்டு நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள். ...அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து, ... அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ, முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்.7:1-60).

66 புத்தகங்கள் அடங்கியது வேதாகமம். 60 வசனங்களில் வேதாகமத்தில் ஆபிரகாம் தொடங்கி இயேசு வரை முக்கால் பாகத்தில் நடைபெற்ற சம்பவத்தை ஸ்தேவான் பிரசங்கித்திருக்கிறார். அவர் தன்னைப்பற்றியோ, மற்றவர்களைப்பற்றியோ பேசவில்லை. வேதத்தையும் சத்தியத்தையும் எடுத்துரைத்தார். உங்களுடைய செய்தி எப்படிப்பட்டது?

பெண்கள் பகுதி

# நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்

## Hold On Eternal Life

J.Glory Arjunan



**அ**ன்பான சகோதரிகளே, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற நாம் எதற்காக கிறிஸ்தவர்களானோம்? பிரச்சனை நீங்கவா? வியாதி குணமாகவா? உலக ஆசீர்வாதங்களை பெறவா? அல்லது தேவன் அருளிய ஆசீர்வாதமாகிய "நித்திய ஜீவனை" பெறுவதற்கா? சற்று யோசித்துப்பார்ப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் "இயேசுகிறிஸ்துவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" என்று பிலிப்பியர்3:12-14-ல் சொல்வதை வாசிக்கிறோம். ஆம், நமது விருப்பமும், ஆசையும் இவ்விதமாகவே இருக்கட்டும். "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப்போராடு நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்..." (1தீமோ.6:12). அண்டசராசரங்களை உண்டாக்கின சர்வவல்லமை பொருந்திய தேவன் நம்மை மட்டுமல்ல உலகிலுள்ள அனைவரையும் இரட்சிக்கும்படியும், நித்திய ஜீவனை தரும்படியும் தமது ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை தந்தருளினார். இதை அறியாத புரியாத அநேகர் கிறிஸ்தவத்தை தவறாக புரிந்து கொண்டு நித்திய ஜீவனை இழக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். அன்பான சகோதரியே, நீ எப்படியிருக்கிறாய்? மேலான ஆசீர்வாதமான நித்திய ஜீவனை பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்.

இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு, இன்றைய நாட்களில் சகோதரிகளிடத்திலே அழிந்து போகக்கூடிய பொருட்களின் மேல் ஆசை, இச்சைகளை அளவில்லாமல் விதைத்துக்கொண்டு வருகிறான். அன்றைய நாளிலும் பார்வைக்கு இன்பமும், இச்சிக்கப்படத்தக்க விருட்சமும் எனக்கண்ட ஏவாளுக்கும் தவறான ஆலோசனையைக் கொடுத்து விழச்செய்தான். அதே பிசாசு இன்றும் நம்மிடையே பலவித கவர்ச்சிகரமான பொருட்களைக் காண்பித்து தன் வலைக்குள் இழுக்கப் பார்க்கிறான். நாமோ நித்திய ஜீவனாகிய கிறிஸ்துவை பற்றிக்கொள்வோம். "அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்" (1யோவா.5:11).

பிரியமான சகோதரிகளே! யாருக்கு நித்திய ஜீவனை அளிப்பார்? வேதம் கூறுகிறது. "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோம.2:7). நீங்களும் நானும் இதை தேடி நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்வோம்.



அவர்கள் இயேசு தங்களுக்குப் போதித்திருந்த எல்லாவற்றையும் நினைவுகூரும்படிக்கும் வல்லமை பெற்றவர்களாயிருந்தார்கள். அவர்கள் சகல சத்தியத்திற்குள் நடத்தப் பட்டார்கள், வரவிருக்கிற காரியங்களை முன்னக்கூடியே சொல்லும் வல்லமையுடையவர்களாயிருந்தார்கள் மேலும் அவர்களால் வியாதியஸ்தர்களை குணமாக்கவும் மரித்தவர்களை உயிரோடெழுப்பவும் முடிந்தது. மனுஷர், இன்று, அப்போஸ்தலர்கள் போல் தாங்களும் அதே வல்லமை பெற்றிருக்கிறோம் என்று உரிமைபாராட்டுகிறவர்கள், அப்போஸ்தலர் செய்தது போல், நூறு சதவீதம் அவர்கள் கூறுகிறது நடைபெறவேண்டும். அவர்கள் தங்களுடைய உண்மையை நிரூபிக்கும்படி இந்த பரீட்சையில் தேறமுடியுமா?

சபையின் ஆரம்ப நாட்களில், வளர்ந்து வரும் சபையின் சரீர தேவைகளுக்கென சரியாக ஊழியஞ்செய்யும்படிக்கு அப்போஸ் தலர்களுக்கு உதவி தேவையாயிருந்தது. அவர்கள் பரிசுத்த ஆவியில் நிறைந்திருந்த ஏழுபேரை அவர்களில் தேர்ந்தெடுத்து அவர்களை இந்த விசேஷித்த வேலைக்கென்று ஏற்படுத்தும்படிக்கு சகோதரரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் கவனியுங்கள்---இது அப்.2:38ல் எழுதப்பட்டபடி பரிசுத்த ஆவியின் வரம் --- ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியின் அற்புதம் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. இது கிறிஸ்துவினிடம் வருகிறவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகின்றனர் என்ற தவறான உபதேசத்தை மறுக்கிறது. அப்.2லிருந்து அப்.6 வரையிலுள்ள பகுதிகளை வாசிப்பதிலிருந்து அப்போஸ்தலர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தார்கள் என்பது வெளிப்படையாக தெரியக்கூடியதாய் இருக்கிறது. மற்ற யாவரும் தண்ணீரில் ஞானஸ்நானம் மட்டுமே பெற்றிருந்தனர், பரிசுத்த ஆவியின் அற்புதம் செய்யும் வல்லமையின் நிறைவினை, அதாவது பரிசுத்தஆவியின் வரத்தினைப் பெற்றிருக்கவில்லை. எனவே ஏழுபேர் தெரிந்தெடுக்கப்பட்டனர், மேலும் அவர்கள் அற்புதங்கள் செய்யவும், மற்ற பாஷைகளில் பேசவும், இன்னும் பல காரியங்களைச் செய்யவும் வல்லமையுடையவர்களாயிருக்கும்படிக்கு அப்போஸ்தலர்கள் அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்.

இந்தச் சம்பவங்கள் நமக்கு ஆவியின் நான்கு 'அளவுகளைக்' காண்பிக்கிறது:

1. கிறிஸ்துவுக்கு அளவில்லாமல் அல்லது எல்லையில்லாமல் பரிசுத்தஆவியானவர் கொடுக்கப்பட்டார் (யோவா.3:34)

2. அப்போஸ்தலர்கள் எல்லாவிதமான அற்புதங்களைச் செய்யும் வல்லமையுடையவர்களாயிருக்கும்படிக்கும், மற்றவர்களுக்குக் குறிப்பிட்ட சில அற்புதங்களை செய்ய வல்லமையைக் கொடுக்கவும் அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவிக்குள் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் (யோவா.15:26,27; 16:7,8; அப்.1:5,8)

3. அப்போஸ்தலர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள்மேல் தங்கள் கைகளை வைத்து, தனித்தனியாக அற்புதங்களைச் செய்யும் , அதாவது கல்லாத ஒருவர் பல பாஷைகளில் பேசும் வல்லமையை பெறுவதற்கும், இன்னொருவர் வியாதியஸ்தரை குணமாக்கும் வல்லமையை பெறுவதற்கும், மற்றொருவர் ஆவியின் வழிநடத்துதலின் மூலம் தீர்க்கதரிசனங்களைப் போதிக்கவும் வேறொருவர் ஞானத்தைப் போதிக்கவும் தக்க வல்லமையை அவர்களுக்குக் கொடுத்தார்கள்- சபையில், பல்வேறு அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்ட இந்த

பல்வேறு வரங்கள் மூலமாக கிறிஸ்தவர்கள் வழி நடத்தப்பட்டார்கள் (1கொரி.12,13,14)

4. எல்லா கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப் படுத்தப்படும் போது, அவர்கள் வாழ்வின் வரமாக பரிசுத்த ஆவியை பெறுகிறார்கள் (அப்.2:38)

கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பின், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமாகி உலக முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். மேலும் அவர் அவர்களுக்கு, விசுவாசிக்கிறவர்கள் இரட்சிப்படையும்படி ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆனால் விசுவாசியாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள் என்றும் பிரசங்கிக்கும்படிச் சொன்னார். அவர், “விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதென்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் ஆமென்” (மாற்.16:17-20) என அப்போஸ்தலர்களுக்கு வாக்குப்பண்ணினார். இந்த எல்லா அற்புதகாரியங்களையும் அப்போஸ்தலர்களுக்கு வாக்குப்பண்ணினார், பொதுவான ஜனங்களுக்கு அல்ல, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் கூட அல்ல என்பதை கவனியுங்கள். அவர்கள் நவமான பாஷைகள் அல்லது மொழிகளில் பேசுவதற்கு வல்லமையுடையவர்களாயிருப்பார்கள் என்பது வாக்குத்தத்தங்களின் ஒரு பகுதியாய் இருந்தது. நாம் சுட்டிக்காட்டியபடி இவைகள் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் நிறைவேறின.

இடையில் அப்போஸ்தலர்கள் மரித்தார்கள், அவர்கள் யார்மேல் கைகளை வைத்தார்களோ அவர்களும் மரித்தார்கள், புதிய ஏற்பாடு எழுத்துவடிவில் கொடுக்கப்பட்டது. இனிமேல் அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்கள் தேவையில்லை, அவைகள் முடிந்து போயின. பவுல்கூட, “அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஒய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்” (1கொரி.13:8-10) என பிரகடனப்படுத்தினார்.

“அந்த நிறைவானது” என்பது அநேகர் இன்று தவறாக போதிப்பதுபோல் கிறிஸ்துவின் வருகைக்கு ஒப்பிடப்பட்டவையல்ல. “அந்த” என்பது பேசுகிறகாரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, ஜனங்களுடையவற்றிற்கு அல்ல. சரியாக நிறைவான சுயாதீனப் பிரமாணமாக இருக்கிற அதுவே நிறைவான பொருள், அதாவது புதியஏற்பாடு. “குழந்தைக் கேற்ற” அற்புதங்கள் மேல் இனி ஒருபோதும் நாம் நம்பிக்கை வைக்கவேண்டியதில்லை அந்த காரியங்கள் (இன்றும்) மாயவித்தைக்காரர்களாலும் தவறான மார்க்கப் போதகர்களாலும் நடக்கும் மாயமான காரியமாயிருக்கும். மாறாக, விசுவாசிக்கும்படி நாம் கர்த்தருடைய வசனத்திற்குச் சென்று, தேவனுடைய சித்தத்தை அறிந்து, அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற காரியங்களைச் செய்வோம்.



மனுஷன் தன்னை நெருங்கிச் சேரவேண்டுமென்று வாஞ்சிக்கிறார். மனுஷன் தன்னிடமாய் மீண்டும் வரும் வழியை அவனுக்கு போதிக்கவேண்டுமென்று விரும்புகிறார். யார் தேவன் அளித்துள்ள எளிதான திட்டத்தின்படி ஜீவிப்பார்களோ அவர்களை மன்னித்து அவர்களை தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள அவர் விருப்பமுடையவராக இருக்கின்றார்.
"... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே.31:34).

**கேள்விகள்**

1. எந்த சில காரியங்களிலே மனுஷர்கள் எறும்பின் பார்க்கும் திறன், உணர்ந்து கொள்ளும் திறன் இவற்றுக்கு அப்பாற்பட்டவர்களாயிருக்கிறார்கள்?

2. மனுஷருக்கும் தெய்வத்தன்மைக்கும் இடையே காணப்படுகிற மேற்கொள்ள முடியாத சுவரை குறித்து ஆராய்ந்து பேசவும்.

3. நாம் தேவனை காண அல்லது உணர்ந்துகொள்ள முடியாது என்ற போதிலும் நம்முடைய ஆவிகள் என்ன செய்கின்றன?

4. மனுஷன் தனிப்பட்ட வகையில் "-------------------" என்பது மனுஷனுடையதாக இருந்தாலும் -------------------------- --------------------- -------------- என்பதும் --------------.

5. தேவன் ------------------------ ------------------------- ------- ------ ---------------------- மனுஷனுடைய ஆவி சொற்பமான ஜீவிய கலத்தை -------------- அல்லது --------------------- ------------------------ தொடர்புடையதாயிருக்கிறது.

6. தேவன் இருக்கிறார் என்பதற்கான மிகப்பெரிய நிரூபணங்களில் ஒன்று என்ன?

7. இந்த கேள்விகளையும், சிந்தனைகளையும் பகுத்து என்ன முடிவை நீங்கள் அடைந்திருக்கிறீர்கள்?

எச்சரிப்பின் வார்த்தை

A Word of Exhortation



## எபிரெய புத்தகத்திலிருந்து...
## ‘பின்பற்றக்கடவோம்’

1. பயந்திருக்கக் கடவோம் 4:1
2. ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்– 4:11
3. உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக் கடவோம் – 4:14
4. கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் – 4:16
5. நிச்சயத்தோடும் சேரக் கடவோம் – 10:22
6. ஒருவரையொருவர் கவனிக்கக் கடவோம் – 10:24
7. புத்தி சொல்லக் கடவோம் – 10:25
8. பாரமான யாவற்றையும் தள்ளக் கடவோம் – 12:1
9. பொறுமையோடே ஓடக் கடவோம் – 12:1
10. கிருபையைப் பற்றிக்கொள்ளக் கடவோம் –12:28
11. அவரிடத்திற்குப் புறப்பட்டுப் போகக் கடவோம் – 13:13
12. தேவனுக்குத் துதி செலுத்தக் கடவோம் –13:15

மனுஷனோ வென்றால் இவ்வகையான குணாதியசங்களில் இதுவரை மிகவும் குறைவுபட்டவனாகவே இருக்கிறான். ஆகையால் மனுஷன் இருக்கின்ற தாழ்மையான நிலைக்கு தேவன் கீழ்நோக்கி சென்றடைவது என்பது தேவனுக்கு சாத்தியமான காரியம் அல்ல ஏனென்றால் நாம் அனைவருமே பாவஞ்செய்கிறவர்களாயிருக்கிறோம் இவ்வாறு இல்லாமல் இருந்த போதிலும் தேவன் மற்ற இரண்டு குணாதிசயங்களாகிய அன்பு மற்றும் இரக்கத்தின் சாராம்சமாக இருக்கிறார்.

தேவன் ஏன் தம்முடைய சிருஷ்டிப்பின் கீழ்ப்படியாமையையும் உண்மையற்ற தன்மையையும், தூஷணத்தையும் சகித்துக் கொள்ளவேண்டும்? நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளும் நிலையில் நாம் இல்லை என்ற உண்மையின் அடிப்படையில் தேவன் ஏன் நம்முடைய பாவங்களை மன்னிக்கத்தக்கதாக ஒரு வழியை உண்டாக்க வேண்டும்? நாம் நம்முடைய சொந்த அநியாயத்திலிருந்து இரட்சிக்கப்பட நாம் என்ன செய்ய வேண்டும் என்று ஏன் அவர் நமக்கு சொல்ல வேண்டும்? தேவன் நம்மை சகித்துக் கொள்கிறார் ஏனென்றால் அவர் மனிதவர்க்கத்தை நேசிக்கிறார். நம்முடைய அற்பமான தன்மையிலும் அவர் நம்மை வழி நடத்துகிறார் ஏனென்றால் அவருடைய இரக்கம் பெரிதாயிருக்கிறது.

"பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது (1யோவான்4:7-10).

"அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1யோவான்4:19).

மனுஷ இருதயத்திலும் கூட அன்பானது இரக்கம் மற்றும் மன்னிப்புக்கான ஒரு வாஞ்சையை உருவாக்குகிறது. தேவன் தம்முடைய பெரிதான அன்பிலே இரக்கத்திற்கான முதல் மூலகாரணராக இருக்கிறார். தேவன் தக்க சமயத்திலே அதை அறிவித்தார்.


"கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்;" (யாத்.34:6,7).

"அவர் தமது அன்பினிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டு... (ஏசா.63:9).

"ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக்.6:36).

ஏனென்றால் மனுஷனுடைய பாவத்திலும், கீழ்ப்படியாமையிலும் இருந்தபோதிலும் தேவன் அவனிடத்தில் அன்பு கூருகிறார். ஏனென்றால் அவர்





# உங்கள் போதனைகள் வேதத்தின்படியானதா?

நீங்கள் ஒரு போதகரா, உங்களுடைய போதனை வேதாம சத்தியத்திலிருந்து போதிக்கப்படுகிறதா? எல்லா போதகர்களும் வேதத்தை எடுத்துக்கொள்வார்கள். ஆனால் பேசுவது சொந்தக்கதைகளையும், கனவுகளையும், பொய்சாட்சிகளையும் இல்லாதவைகளையும் பேசி கையில் வைத்திருக்கும் வேதத்தின் போதனைகளை ஜனங்களுக்கு பிரசங்கிக்க தவறிவிடுகின்றனர். பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த யோசுவா கர்த்தருடைய வார்த்தையின்படி அவனுக்கு முன்பு உள்ள பிதாக்களின் சரித்திரத்தை எடுத்துரைத்தான். இதைத்தான் அப்போஸ்தனாகிய பேதுரு சொல்லும்போது; **"ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்றார்" (1பேது4:11)**.

நீங்கள் கர்த்தருடைய ஊழியக்காரன் என்றால் அதைச் செய்யுங்கள். யோசுவா அப்படியே ஜனங்களை வழிநடத்தினான்.

"பின்பு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்தான்; அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்கள். அப்பொழுது யோசுவா சகல ஜனங்களையும் நோக்கி: **இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்;** பூர்வத்திலே உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்கும் தகப்பனான தேராகு என்பவன், நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது அவர்கள் வேறே தேவர்களைச் சேவித்தார்கள். நான் நதிக்கு அப்புறத்தில் இருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமை அழைத்துக்கொண்டுவந்து, அவனைக் கானான் தேசமெங்கும் சஞ்சரிக்கச்செய்து அவன் சந்ததியைத் திரட்சியாக்கி, அவனுக்கு ஈசாக்கைக் கொடுத்தேன். ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையும் கட்டளையிட்டு, ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படி கொடுத்தேன்; யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ எகிப்துக்குப் போனார்கள். நான் மோசேயையும் ஆரோனையும் அனுப்பி, எகிப்தியரை வாதித்தேன்; அப்படி அவர்கள் நடுவிலே நான் செய்த பின்பு உங்களைப் புறப்படப்பண்ணினேன்.

நான் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினபோது சமுத்திரக்கரைக்கு வந்தீர்கள்; எகிப்தியர் இரதங்களோடும் குதிரைவீரரோடும் உங்கள் பிதாக்களைச் சிவந்த சமுத்திரமட்டும் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அப்பொழுது அவர் உங்களுக்கும் எகிப்தியருக்கும் நடுவே அந்தகாரத்தை வரப்பண்ணி, சமுத்திரத்தை அவர்கள்மேல் புரளச்செய்து, அவர்களை மூடிப்போட்டார்; நான் எகிப்திலே செய்ததை உங்கள் கண்கள் கண்டது; பின்பு வனாந்தரத்தில் அநேகநாள் சஞ்சரித்தீர்கள். ....அப்படியே நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும், நீங்கள் கட்டாத பட்டணங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகளில் குடியிருக்கிறீர்கள்; நீங்கள் நடாத திராட்சத்தோட்டங்களின் பலனையும், ஒலிவத்தோப்புகளின் பலனையும் புசிக்கிறீர்கள் என்றார். ஆகையால் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள்.

கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால் பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக்குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்" (யோசுவா 24:1-15).

## யார் மீது நம்பிக்கையாயிருக்கவேண்டும்? *- M.Rajamani*



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நமது நம்பிக்கையில்தான் நமது வாழ்வும் எதிர்காலமும் அமைகிறது. யார் மீது? எதன் மீது எப்படி நம்பிக்கை அமைகிறதோ அதைப் பொறுத்தே நமது வெற்றிகளும் தோல்விகளும் அமைகின்றன.

தாவீது சொன்னார்: (கர்த்தாவே) நான் உம்முடைய கிருபையின் மேல் நம்பிக்கையாயிருக்கிறேன்" (சங்.13:5). தேவனுடைய கிருபை நமது நம்பிக்கையாய் இருக்குமானால் நமது தோல்விகள் தவிர்க்கப்படும், தடுமாற்றங்கள் விலகும், இருள் அகலும், ஒளிபிறக்கும். நாமும் எழும்பிப் பிரகாசிப்போம்.

மேலும் அன்பானவர்களே! வல்லமையான ஊழியர் பவுலுக்கு இயேசு கிறிஸ்து: "என் கிருபை உனக்குப்போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்றார். எனவே தேவனுடைய கிருபையை மட்டும் நம்புங்கள். இடறிப்போகாதிருங்கள். "மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து மாம்சமானதை தன் புயபலமாக்கிக் கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே.17:5).

நன்மைகள் பெறவேண்டுமா? முதலில் கர்த்தர் மீது நம்பிக்கை வையுங்கள், முயற்சியுங்கள் வெற்றியை அவரே தந்தருள்வார். "நாசியில் சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள். எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்" (ஏசா.2:22). கர்த்தரே உங்கள் நம்பிக்கையாய் இருக்கட்டும். மனிதர்களிடம் அன்பு பாராட்டுங்கள். உதவி செய்யுங்கள். ஆனால் கர்த்தரைப்போல மனிதர்களை பூரணமான நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக வைக்காதிருங்கள். குடும்பம், நண்பர்கள், சகவிசுவாசிகள், அக்கம்பக்கத்தவர்கள், உறவினர்கள் தேவைதான். ஆனால் முழுநம்பிக்கையும் கர்த்தர் மீதே இருக்கவேண்டும். இப்போ சொல்லுங்கள் யார் மீது நம்பிக்கை வைக்கப்போகிறீர்கள்? கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து தேவன் நமக்கு அருளிய கிருபையின்படி நன்கு விசாரித்து, புத்தியாய் நடந்து ஜெபித்து காரியங்களை நடத்துங்கள். கர்த்தர் மீது வைக்கும் கடுகளவு விசுவாசம்கூட பெரிய ஆசீர்வாதமே!


தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். **9443558041**








பெண்கள் பகுதி

## தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?
## Can Man Find the Way to God? *-Betty*

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**




**தேவனுடைய நியாயம்**

தேவன் தம்முடைய இயல்பிலே மாறாதவராக இருக்கின்ற போதிலும், அவர் தொடர்ந்து நம்முடைய மனோபாவங்களையும், அவருக்கான நம்முடைய மறுமொழிகளையும் அறிந்தவராயிருக்கிறார். அவர் நம்முடைய நடத்தைக்கு மறு மொழியாக நேர்மறை யாகவோ அல்லது எதிர்மறையாகவோ செயல்படுகிறார். நாம் அவருக்கு விரோதமாக பாவம் செய்கிற பொழுது நம்முடைய பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது.

"இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

"ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும், கறைப்பட்டிருக்கிறது; உங்கள் உதடுகள் பொய்யைப்பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது. நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை; மாயையை நம்பி, அபத்தமானதைப் பேசுகிறார்கள்; தீமையைக் கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்" (ஏசா.59:1-4).

மனுஷர்கள் தவறு செய்கிற பொழுது அவர்கள் தேவனுடைய இயற்கையான மாறாத பரிசுத்தத்தை நியாயத்தை மீறுகிறார்கள், தேவனுக்கு இவ்விஷயத்தில் தெரிந்தெடுத்தல் என்று ஒன்றில்லை, ஆனால் அவர் பாவியையும், அவனோடேகூட அவனுடைய பாவங்களையும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்க வேண்டியதாயிருக்கிறது. நாம் ஒத்துக்கொள்ளுகிற நியாயமுறைகளிலும், நியாயக்கேடான கிரியைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. ஒரு நபர் அத்தகைய சட்டங்களை மீறுகிற பொழுது அவர் தன்னுடைய கிரியைகளுக்காக நியாயத்திலே கொண்டுவரப்பட பொறுப்பாளியாக இருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நம்முடைய உரிமை மற்றும் நியாயத்தை குறித்த அறிவு தேவனுக்குள் இருக்கும் பண்புகளை அடிப்படையாக கொண்டதாக இருக்கிறது. இவைகள் மனுஷன் அவருடைய சாயலில்" உருவாக்கப்பட்ட பொழுதே நன்கு பதிக்கப்பட்டதாயிருந்தன எனவே நம்முடைய பாகத்திலே ஒரு நியாயமான தேவனிடமிருந்து தண்டனை என்பது வேண்டியதாகவே இருக்கிறது.

**தேவன் அன்பு மற்றும் இரக்கத்தின் சாராம்சமாகவும் இருக்கிறார்**

தேவனிடத்திலே பூரணத்துக்கான ஒவ்வொரு குணாதிசயமும் இருக்கிறது